## Oriental Schools

*92. Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of Oriental Schools in the State;

(b) the amount of endowment each school has to create;

(c) whether there is a proposal to enhance the endowment; and

(d) if so, the details thereof?

## கீழ்த்திசைக் கல்விப் பள்ளிகள் (ஓரியண்டல் பள்ளிகள்)

*திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) இம்மாநிலத்திலுள்ள கீழ்த்திசைக் கல்விப் பள்ளிகள் (ஓரியண்டல் பள்ளிகள்) எத்தனை ?*

*(இ) ஒவ்வொரு பள்ளிக்கும் இருக்க வேண்டிய கட்டளைத் தொகை யாது ?*

*(உ) இக்கட்டளைத் தொகையை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?*

*(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?*

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 17 கீழ்த்திசைப் பள்ளிகள் உள்ளன.*

*(இ), (உ) & (எ) : 1972-73 வரை ரூபாய் 20,000 அறக்கட்டளை செலுத்த வேண்டுமென்ற விதியிருந்தது. 1973-74 லிருந்து கீழ்த்திசை மொழி உயர்நிலை பள்ளிகளுக்கு ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.*

*திரு. ஜி. **சுவாமிநாதன் :** தலைவரவர்களே, கீழ்த் திசைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டபோது, அதற்காக தனியாக என்டோமென்ட் ஏற்படுத்த வேண்டியதில்லை என்று இருந்தது என்று கேள்விப்படுகிறேன். அது வாஸ்தவமா என்று அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 1972-73-க்கு முன்னாலே ரூபாய் 20 ஆயிரம் கட்ட வேண்டுமென்று இருந்தது. இப்போது எல்லாப் பள்ளிகளுக்கும் நாம் ஒரு லட்சம் ரூபாய் என்று ஆக்கியிருப்பதன்*

காரணமாக, அந்த விதியின் கீழ் வரவேண்டுமென்ற காரணத்திற்காக, இனிமேல் 1973-74-லிருந்து ஒரு லட்சம் அறக்கட்டளை ஏற்படுத்த வேண்டுமென்று போடப் பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இது வரை நடந்து வருகின்ற பள்ளிகளுக்கும் இந்த ஒரு லட்சம் ரூபாய் கட்ட வேண்டுமா அல்லது அவைகளுக்கு விதிவிலக்கு உண்டா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கு முன்னால் ஏற்பட்ட பள்ளிகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் தேவையில்லை. இதற்கு முன்னால் ஏற்பட்டவை களுக்கு அந்த விதிமுறைதான். ரூபாய் 20 ஆயிரம்தான் கட்ட வேண்டும்.

## Stagnation Allowance

@ * Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state the categories of teachers to whom the Stagnation Allowance has been recommended by the Second Pay Commission?

## பதவி உயர்வுத் தேக்கப் படி

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இரண்டாவது சம்பள ஆணைக்குழு, எந்தெந்த வகை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுத் தேக்கப் படி (Stagnation Allowance) வழங்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரண்டாவது சம்பளக் குழு அரசு ஊழியர்களுக்குத் தேக்கப் படி கொடுக்கப் பரிந்துரை செய்துள்ளது. இது அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும். இச் சலுகை உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் மானியம் பெறும் தனியார் பள்ளி களிலுள்ள ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

---

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.